கடற்புலிகள்

இக் கடற்போரிலும் கரும் புலித் தாக்குதல் வடிவம் புகுத் தப்பட்டு, கடற்போர் ஒரு புதிய பரிமாணத்திற்குள் சென் றது.

இந்த வகையில் சிறீலங்காக் கடற்படை மீதான தனது முத லாவது பாரிய தாக்குதலை, 10.07.1990 அன்று வல்வைக் கடலில் வைத்துக் கடற் கரும் புலிகள் மேற்கொண்டனர்.

வெடி மருந்து நிரப்பிய பட கொன்றுடன் சென்ற கடற் கரும்புலிகளான மேஜர் காந்த ரூபன், கப்டன் கொலின்ஸ். கப்டன் வினோத் ஆகியோர் சிறீலங்கா கடற்படையின் ஒரு போர்க் கப்பலைச் சேதமாக்கி, இந்த வீரசாதனையைப் படைத் தார்கள்.

இதே போன்று 04.05.1991 அன்றும் வல்வைக் கடலில் வைத்துக் கட்டளைக் கப்ப லொன்று கடற்புலிகளால் தகர்க்கப்பட்டது. இதுவும் ஒரு கரும்புலி நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் வீரச் சாவை அணைத்துக்கொண் டார்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சுதந் திரமாக உலாவந்த சிங்களக் கடற்படையினருக்கு இவ் விரண்டு கரும்புலி நடவடிக் கைகளும் பீதியைக் கொடுத் திருந்தன. அத்துடன் தமிழீழக் கடற்பரப்பில் சிங்களக் கடற் படை வைத்திருந்த கடல் ஏக போகம் உடைந்து சிதறியது.

தமிழ் மக்களாகிய நாம் ஒரு யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைக்கான போராட்டம் நிலங்களை விடுவிக்கும் அள விற்கு முன்னேறியபோது, சிறீலங்கா அரசானது கடல் மூலமே தனது படைபலத்தைப் பிரயோகித்து, எமது முன்னேற் றத்தைத் தடுக்க முயன்று வரு வதை, நாம் கண்டு வருகின் றோம். அதாவது, தரையுத் தத்தை வெல்ல எதிரி கடலையே பயன்படுத்தி வருகின்றான்.

1987 ஆம் ஆண்டு வட மராட்சியைக் கைப்பற்ற 'ஒப்ப ரேஷன் லிபரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கையைச் சிங்களப் படைகள் நடாத்திய போதும், 1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாமை நாம் வெற்றிகொள்ள முயன்ற சம யத்திலும், 1991 ஆம் ஆண்டு சிலாவத்துறை முகாமை நாம் கைப்பற்ற முயன்ற சமயத்தி லும், 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரின்போது எம்மிடம் வீழ்ச்சியடையும் நிலை யில் இருந்த ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாக்கும் போதும். சிறீலங்கா அரசு கடல்வழிமூலமே தனது பலத் தைப் பிரயோகித்து, எமது முயற்சிகளுக்குக் குறுக்கே நின் றது.

இதற்குப் பிரதான காரணம் எமது கடலில் எதிரி வைத்தி ருந்த கடல் ஏகபோகம்தான்.

தலைவர் பிரபாகரன் அவர் கள் அடிக்கடி கூறுவார்: "புவி யியல் ரீதியாகத் தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப் போயுள்ளது. எனவே, கடற் பரப்பிலும் நாம் பலம் பொருந் தியவர்களாகி, எமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடல் ஆதிக்கத்தைத் தகர்த்து, எமது கடலில் நாம் பலம் பெறும் போதுதான், விடுவிக்கப்படும் நிலப்பகுதியை நிரந்தரமாக நிலைநிறுத்திக்கொள்வதுடன், தமிழீழத்தின் நிலப்பகுதிகளில் இருக்கும் எதிரிப் படையையும் விரட்டியடிக்க முடியும்."

ஒரு கடற்படையை நாம் கட்டி யெழுப்ப வேண்டுமாயின், ஏராளமான பொருட் செல வைச் சந்திக்க நாம் தயாராக இருக்கவேண்டும். தரைச் சண்டைகளுக்குப் பயன்படுத் தப்படும் ஆயுதங்கள், உபகர ணங்களின் பெறுமதியைவிடக் கடற் சண்டைகளுக்குப் பயன் படுத்தப்படும் ஆயுத உபகர ணங்களின் பெறுமதி மிக மிக அதிகமாகும். எனவே ஒரு கடற்படையைக் கட்டி வளர்க் கப் பொருளாதார பலமும் தேவை

புதிய பெயருடன் பெரியளவில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

இக்காலத்தில் இதன் சிறப் புத் தளபதியாக சூசை அவர் களும், தளபதியாக கங்கை அமரன் அவர்களும் நியமிக்கப் பட்டிருந்தனர்.

இக்காலத்திலேயே சிறீலங் காக் கடற்படையினர்மீது கட லில் வைத்தும், கடற்கரை யோரங்களில் உள்ள காவல் அரண்கள் மீதும், பல வெற்றி கரமான தாக்குதல்களைக் கடற்புலிகள் நிகழ்த்தினர்.

இத்தொடரான தாக்குதல்க ளின்போது, கனரக ஆயுதங் கள் பொருத்தப்பட்ட விசைப் படகுகள் சில, பல்வேறு முனை களிலும் தாக்கி அழிக்கப்பட் டன.

ஆனையிறவுக் கடல்நீரேரி யில் வைத்து 41 அடி நீளமான அதிவேகச் சண்டைப் பட கொன்று, கடற்புலிகளால் திட்டமும் கேள்விக் குறியாகி விட்டது.

அத்துடன் அண்மைக் காலத்திலிருந்து, தமிழீழக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற் படையின் மேலாதிக்கம் படிப் படியாகச் சரிந்துகொண்டிருப் பதையும் காணலாம். அதனால் தமிழீழம் மீதான தனது ஆக் கிரமிப்புப் போர் மிகப் பெரிய பின்னடைவை எதிர்நோக்கு வதையும், சிங்கள ஆளும் வர்க்கம் உணரத் தொடங்கியி ருக்கும்.

தமிழீழக் கடலன்னை தியா கத்தாலும், சோகத்தாலும் உரு வான ஒரு மகத்தான காவியத் தைத் தன்னுள் கொண்டிருக் கின்றாள்.

எத்தனை இனிய தோழர் கள்,

எவ்வளவு நிறமையான கட லோடிகள்,

மீனுக்கு இணை யான நீச்சல் காரர்கள்,

தியாகத்தின் உயர் வடிவமான கடற் கரும்புலி கள்!

சாவு வரும் என்பதைத் தெரிந்தும் இவர் கள் பயணம் போனார்கள். ஒவ்வொரு முறை யும் அவர்கள் பயணம் போன போது, கரை யிலே நின்று கை விசி அனுப்பி வைத்தோம். ஆனால் நாம் பார்த்துக்கொண் டிருந்த போதே, அந்தப் பரந்த கடலோடு கரை ந்து போனவர் கள் பலர்.

தமிழீழக் கட லன்னையின் மடியிலேயே இர வும் பகலும் கிடந்து, பனியை யும் குளிரை யும், தம்முயிரையும் பாரா து கடலோடிய தமிழீழத் தாயின் புதல்வர்களில் எத்தனையோ பேர், அந்த உப்பு நீருடனேயே சங்கமமானார்கள்.

இது எங்கள் கடல்; இது தமிழீழத் தாயகத்தின் இணை பிரியாத ஒரு அங்கம். அந்நிய ரின் ஆதிக்கத்திலிருந்து இது மீட்கப்பட வேண்டும். அதற்கா கவே கடற்புலிகள் உயிரை யும் மதியாது பயணம் போய், உன்னதமான தியாகங்களைப் புரிந்து, வீர காவியங்களைப் படைத்துக்கொண்டிருக்கி றார் கள்.

ஒரு நாள், நிச்சயமாக எங் களின் கடற்படைக் கப்பல்கள் எங்களின் கடலில் பவனிவரும்; அப்போது எங்களின் இளைய பரம்பரையினர் பயமின்றி, சுதந்திரமாக எங்களின் கட லில் உலாவருவார்கள். ○

கடற் கரும்புலிகள் மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன்.

இது எங்கள் கடல். இது தமிழீழத் தாயகத்தின் இணைபிரியாத அங்கம். தரையோடு, இந்தக் கடலும் மீட்கப்பட்டே ஆகவேண்டும்.

தமிழீழத்தைப் பொறுத்த வரை வெளியுலகத் தொடர்பு களுக்கும், போராட்டத்திற்குத் தேவையான விநியோகங்களுக் கும், அதற்குரிய செயற்பாடுக ளுக்கும் கடலே பிரதான வழி யாக இருக்கின்றது.

எமது தரை எல்லையை (சிறீலங்காவுடனானது) இதற்கு நாம் பயன்படுத்த முடியாது.

எனவே போக்குவரத்து, விநி யோகங்கள், உலகத் தொடர் புகள் யாவுமே கடல்மூலமே உள்ளன.

எனவேதான் எதிரி வைத்தி ருக்கும் கடலாதிக்கத்தைத் தகர்த்து,கடற்பரப்பில் அவனது நடமாட்டத்தைத் தடுக்க வேண் டியது, மிகமிக அத்தியாவசிய மானது. அப்போதுதான் எமது தாயகப் போர் வெற்றிபெற முடியும்.

1984 ஆம் ஆண்டிலிருந்து கடற்புலிகள் என்ற பெயரால் அழைக்கப்பட்ட எமது கடல் அணி, 1991 ஆம் ஆண்டு பிற்பகுதியில், 'விடுதலைப் புலி களின் கடற்புலிகள்' என்ற மூழ்கடிக்கப்பட்டது. அத்துடன், நடுக்கடலில் வைத்துச் சிங்க ளக் கடற்படையுடன் வெற்றி கரமான படகுச் சண்டைகளி லும் கடற்புலிகள் ஈடுபட்டுள் ளனர்.

இக் கடற் தாக்குதல்களிலும் கடற் சண்டைகளிலும் கணிச மான சிங்களக் கடற்படையி னர் கொல்லப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து ஆயுதங் களும் கைப்பற்றப்பட்டன.

கடற் கண்ணித் தாக்குதல் களை நிகழ்த்துவதில் இருந்து, நவீன மயப்படுத்தப்பட்ட சிங் களக் கடற்படைக்கெதிராக நேரடித் தாக்குதல்களையும், கடற் சண்டைகளையும் நடத் தக்கூடிய அளவிற்கு விடுத லைப் புலிகளின் கடற்புலிகள் அணியினர் பெற்ற வளர்ச்சி, சிறீலங்காவின் படைத்துறைத் தலைமையைத் திணறடித்துள் ளது. இதன் காரணமாக, கடற் படையின் பலத்தை நம்பிப் போராட்டத்தை நசுக்க அவர் கள் உருவாக்கிய நீண்டகால நோக்கிலான போர்முறைத்

* விடுதலைப் புலிகள் ' - குரல் 29 இதழில் உள்ளடக்கியிருந்த இந்தக் கட்டுரை, இங்கு மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது.